# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# 2016

எல்லை நிர்ணய ஆணைக்குழு

இலங்கை

## நோக்கு

நெறிமுறை மற்றும் நியாயமான கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் சிறந்து விளங்குதல்

## பணிக்கூற்று

அரசியல் யாப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், நியாயமாகவும், வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், விசுவாசமாகவும் மற்றும் சட்டரீதியானதாகவும் எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

## நோக்கங்கள்

- அனைத்து வாக்காளர்களுக்கும் அல்லது பிரசைகளுக்கும் சமமான உயர்ந்த அளவில் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்க விதத்தில் மற்றும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அந்த நிலைமையைப் பாதுகாக்கின்றவாறு வினைத்திறனுடன் அதனை உறுதி செய்வதற்காக தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் ஏனைய நிருவாக எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

- தேர்தல் மாவட்டம் அல்லது நிருவாக பிரதேசம் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக – பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காகக் கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணய அலுவல்களை உரிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்தல்.

- அரசு மற்றும் வேறு நிறுவனங்களுக்கு சுய தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களிற்குத் தேவையான அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

- எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை சேகரிக்கும் நிலையமொன்றைத் தாபித்தல்.

## 1. அறிமுகம்

இலங்கை தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் முதலாம் வருடத்தின் முன்னேற்ற அறிக்கையை பொழிப்பாக இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் செய்யப்பட்ட 19 ஆம் திருத்திற்கமைவாக அரசியல் அமைப்பின் 41 ஆ மற்றும் 95(1) உறுப்புரைகளுக்கு அமைவாக மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு 2015 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. அதன் பணிப்பொறுப்புக்களை செவ்வனே ஆற்றுவதற்காக ஆணைக்குழுவிற்கு பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டதும், பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானிக்கப்படுவதும், தேர்தல் மாவட்டங்களை தீர்மானிக்கும் போது பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அளவுகோல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுமான நியதிச்சட்டங்கள் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு வழங்கப்படும் வரை ஆணைக்குழு எதிர்பார்ப்புடன் உள்ளது. 2016 ஆம் ஆண்டில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கான நிரந்தர அலுவலகம் நில அளவைத் திணைக்களத்தில் திறந்துவைக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் இறுதி வரை எல்லை நிர்ணய ஆணைக்குழு மூன்று அங்கத்தவர்கள்,பகுதி நேர செயலாளர் ஒருவர், பகுதி நேரக் கணக்காளர் ஒருவர் , தவிசாளரின் முழு நேர இணைப்புச் செயலாளர் ஒருவர், இரண்டு அரச முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிக் காணப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு 2016 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து இரண்டு மோட்டார் வாகனங்கள் சனாதிபதி அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய ஆணைக்குழு ஆரம்பத்திலிருந்து எல்லை நிர்ணயம் தொடர்பான பூகோள அனுபவத்தையும், முன்னைய எல்லை நிர்ணய ஆணைக்குழுக்களின் வரலாறு மற்றும் அச்பைகளின் தோற்றத்திற்கான மூல காரணங்கள் போன்ற தகவல்களையும் ஆராய்ந்து பார்ப்பதில் முயற்சிகளை மேற்கொண்டது. இதன் போது ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் பாராளுமன்றத் தேர்தல் மாவட்டங்கள், உள்ளூர் அதிகார சபைப் பிரதேசங்கள் மற்றும் நிருவாக அதிகாரப் பிரதேசங்கள் தொடர்பான எல்லைகளை நிர்ணயம் செய்யும் பொறுப்பு வெவ்வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தமையை அவதானிக்க முடியும்.

தேர்தலொன்றினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் நிருவாகப் பிரதேசங்களுக்குத் தேவையான எல்லைகளை நிர்ணயம் செய்யும் செயற்பாடுகளுக்கு முறையான கட்டமைப்புடன் கூடிய நிரந்தர நிறுவனமொன்று அவசியமாகும். அது காலத்திற்கேற்ப மாற்றம் செய்யப்படுகின்ற மற்றும் மாற்றம் செய்யப்பட்ட முறையாகத் தாபிக்கப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்பது அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவந்துள்ளது. நாட்டின் சனத்தொகை உள்ளடக்கம் அடிக்கடி மாற்றமடைவதால் ஒவ்வொரு சனத்தொகை கணக்கெடுப்பின் பின்னரும் உள்ளூர் அதிகார சபைகள் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை) புதிதாக ஏற்படுத்தல், ஒன்றிணைத்தல் மற்றும் தரமுயர்த்தல் செய்யப்பட்டுள்ளது. தற்போது உள்ளூர் அதிகார சபைகளின் தரத்தை உயர்த்துவதற்கான பல கோரிக்கைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் குவிந்துள்ளன. தற்போதைய நடைமுறை யாதெனில் அவ்வாறான கோரிக்கைகள் ஒன்றை அல்லது பலவற்றை ஆராய்வதற்காக அரசாங்கத்தினால் (அமைச்சரால்) தனிநபர் அல்லது பலரைக் கொண்ட குழுவொன்றை நியமனம் செய்வதாகும். இம்முறை மூலம் இச்செயன்முறைகளின் ஒற்றுமைத்தன்மை அல்லது சமமான தன்மையை அவதானிக்க முடியாது. அவ்வாறான சந்தர்ப்பமொன்று சுயாதீன ஒரு எல்லை நிர்ணயக் குழுவிற்கு கையளிக்கப்படுமாயின் ஒற்றுமையும் மற்றும் சமநிலைத்தன்மையும் கொண்ட நியாயமான அளவுகோல்கள் மற்றும் கோட்பாடுகளுடன் கூடிய ஒரு கட்டமைப்புக்குள் கையளிக்கப்படும் பணிகளை ஆற்றுவதற்கான சாத்தியம் கிடைக்கும்.

இப்பின்னணிக்கு அமைய தேர்தலொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் அனைத்து நிறுவனங்கள் என்பனவற்றுக்குரிய எல்லைகளை நிர்ணயம் செய்யும் அலுவல்களுக்காக சட்டரீதியாக அதிகாரம் கையளிக்கப்பட்ட ஒரு சுயாதீன எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நியமனம் செய்வது உசிதமென இத்தால் முன்மொழியப்படுகின்றது. தேர்தலொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிறுவனங்களுக்காக அரச

சேவைகள் தவிர்ந்த, (கமநல சேவை, கல்வி, சுகாதாரம், நீதிமன்றம், பொலிஸ், அரச நிருவாகம் போன்ற) நிருவாக அலுவல்களுக்காகவும் பிரதேசங்களை எல்லை நிர்ணயம் செய்தல் மற்றும் அடையாளப்படுத்தல் என்பன மிக விரைவாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவைப்பாடொன்றாகுமென்பதை ஆணைக்குழு புரிந்து கொண்டுள்ளது. இந்த நிர்ணயம் செய்தல் பணிகளையும் தாபிக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புகளினுள் உட்சேர்ப்பது அவசியமென இந்த எல்லை நிர்ணய ஆணைக்குழு முன்மொழிகின்றது.

கே.தவலிங்கம்.

தவிசாளர்

எல்லை நிர்ணய ஆணைக்குழு

## 2. பின்னணி.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் **41 ஆ மற்றும் 95** (1) உறுப்புரைகளுக்கு அமைவாக தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட ஆணைக்குழுவின் தவிசாளராக முன்னாள் நில அளவையாளர் நாயகம் கலாநிதி கே.தவலிங்கம் அவர்கள் பதவி வகிப்பதோடு, அதன் அங்கத்தவர்களாக மத்திய வங்கியின் உதவி ஆளுநர் மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தின் புவியல் விஞ்ஞானத் துறை பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.

தற்போதைய அரசியலமைப்பில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. இருப்பினும் நாட்டின் சில நியதிச் சட்டங்கள் மற்றும் செயலொழுங்குகள் சிலவற்றின் கீழ் தேர்தல் மாவட்டங்கள் மற்றும் நிருவாக அலுவல்களின் போது வெவ்வேறு விதமான எல்லை நிர்ணயம் செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாட்டின் உயர்ந்த பட்ச நன்மைக்காக அந்த ஏற்பாடுகளை உகந்தவைகளாக ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நியமனங்களைக் கையேற்றுக் கொண்டதன் பின்னர் அவர்கள் முதலாவது கூட்டத்திற்காக 2015.11.19 ஆம் திகதி அழைக்கப்பட்டனர். அனைத்து எல்லை நிர்ணய அலுவல்களையும் ஒரே எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்களாக மாற்றம் செய்வதற்கு புதிய சட்டம் அல்லது யாப்புத் திருத்தமொன்றின் ஊடாக மேற்கொள்வதற்கு அரசியலமைப்புப் பேரவை எதிர்பார்ப்பதாக அச்சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் நியமனம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் எல்லை நிர்ணய மீளாய்வுக் குழுவின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் அரசியலமைப்பு பேரவை, புதிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவிடமிருந்து எதிர்பார்க்கின்ற விரிவான பணிப்பொறுப்புக்கள் அதன் எதிர்கால செயற்பாடுகளில் தெளிவின்மை காணப்படுவதால் அது தொடர்பாகத் தீர்த்துக் கொள்வதற்காக அரசியலமைப்பு பேரவை ,தேர்தல் ஆணைக்குழு மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்பன இணைந்து கலந்துரையாடுவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்குத் தேவையான அலுவல்கள் எல்லை நிர்ணய மீளாய்வுக் குழுவினால் நிறைவு செய்யப்பட வேண்டுமெனவும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக உத்தேச மாற்றங்கள் இருப்பின் அவற்றை இதன் பின்னர் அரசியலமைப்புத் திருத்தமொன்றின் மூலம் மேற்கொள்ள வேண்டுமெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### 2.1 எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நியமனத் தத்துவம் மற்றும் பணிகள் தொடர்பான அரசியல் யாப்பின் ஏற்பாடுகள் :

19 ஆம் அரசியல் யாப்புத் திருத்தத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 41 ஆ உறுப்புரைக்கமைய,

(1) ஆளெவரும் பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால் நியமிக்கப்படலாகாது.

(2) அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட வெவ்வேறு பல்லின சமூகக்குழுக்களைப்

பிரதிபலித்தலை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக் கொண்ட பதின்நான்கு நாட்களினுள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய பதினான்கு நாட்களுக்குள் அவசியமான நியமனங்களைச் செய்யத் தவறும் பட்சத்தில் -

(அ) ஆணைக்குழுவொன்றின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவொன்றின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட பெயர்கள் பட்டியலில் எவரின் பெயர் முதலாவதாக உள்ளதோ அவர், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, ஆணைக்குழுவின் தவிசாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஆளொருவர் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

(6) தேர்தல் ஆணைக்குழு தவிர்ந்த, இவ்வுறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதலும் வகைச்சொல்லற்பாதலும் வேண்டும்."

**அட்டவணை**

(அ) தேர்தல் ஆணைக்குழு.

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு.

(இ) தேசிய பொலிஸ் ஆணைக்குழு

(ஈ) கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.

(எ) நிதி ஆணைக்குழு.

(ஏ) எல்லை நிர்ணய ஆணைக்குழு.

(ஐ) தேசிய பெறுகை ஆணைக்குழு.

95 (1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்காக சனாதிபதி வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். அது சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதிபதி திருப்பதியுறுதல் வேண்டும். அத்தகைய ஆட்களுள் ஒருவரைச் சனாதிபதி தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவரொருவரும் இறந்தால் அல்லது பதவிதுறந்தால், அல்லது அத்தகைய உறுப்பினரெவரும் அத்தகையவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகிவிட்டாரெனச் சனாதிபதி திருப்தியுற்றால், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சனாதிபதி அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

96 (1) வரையறை ஆணைக்குழு இலங்கையை இருபதுக்குக் குறையாததும் இருபத்தைந்துக்கு மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து அவற்றிற்குப் பெயர்களைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(2) இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றும் அதுவே ஒரு தேர்தல் மாவட்டமாக அமையலாம். அல்லது மாகாணம் ஒவ்வொன்றும் இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படலாம்.

(3) மாகாணமொன்று பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படுமிடத்து, வரையறை ஆணைக்குழுவானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒரு நிருவாக மாவட்டமாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய நிருவாக மாவட்டங்களின் சேர்க்கையாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து நிருவாக மாவட்டமொன்றாக இருப்பதனை இயலக்கூடிய அளவுக்கு உறுதிப்படுத்தும் வண்ணம் அப்போதுள்ள நிருவாக மாவட்டங்களைக் கருத்துக்கெடுத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் மாவட்டங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நான்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவாதல் வேண்டும் : (இது அத்தகைய தேர்தல் மாவட்டங்களின் தேருநர் இடாப்பில் தம் பெயர்களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் எண்ணிக்கையைத் தொடர்புறுத்திப் பார்க்கும் போது எத்தனை உறுப்பினர்களை அம்மாவட்டங்கள் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவோ அத்தனை உறுப்பினர்களைவிடப் புறம்பானது) : வரையறை ஆணைக்குழுவானது அவ்வாறு ஒவ்வொன்றுக்கும் உரித்தாயுள்ள எண்ணிக்கையை அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் ஒப்புரவான முறையில் பங்குபோடல் வேண்டும்.

(5) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரிடையே அபிப்பிராய வேறுபாடு உள்ளவிடத்து, அவர்களில் பெரும்பான்மையினரின் அபிப்பிராயமே மேலோங்கி நிற்றல் வேண்டுமென்பதுடன், அதுவே ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வித்தியாசமான அபிப்பிராயத்தை உடையவராயிருக்குமிடத்து, தவிசாளரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிவெனக் கருதப்படுதல் வேண்டும். வேறுபடும் அபிப்பிராயங் கொண்ட உறுப்பினர் எவரும் அவ்வாறு வேறுபடுவதற்குத் தமக்குள்ள காரணங்களைக் கூறலாம்.

(6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் முடிவுகளை, வேறுபடும் அபிப்பிராயங்களைக் கொண்ட உறுப்பினரால் கூறப்பட்ட காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றோடு சேர்த்து சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

## 2.2 தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் நியதிச்சட்ட ஏற்பாடுகளில் காணப்படும் வரையறைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகள் இரண்டில் ஆணைக்குழுக்களின் பிரதான பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும் ஏனைய ஆணைக்குழுக்கள் போன்று எல்லை நிர்ணய ஆணைக்குழுவின்,

- பணிப்பொறுப்புக்கள்
- தத்துவங்கள்

தொடர்பாக அரசியல் யாப்பில் அல்லது பத்தொன்பதாம் அரசியல் யாப்புத் திருத்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

எல்லை நிர்ணய ஆணைக்குழு 2015.11.23 ஆம் திகதி அரசியலமைப்பு பேரவையைச் சந்தித்த சந்தர்ப்பத்தின் போது இவ்விடயத்தைச் சுட்டிக்காட்டியது. இவ்விடயம் தொடர்பில் அரசியல் யாப்புத் திருத்தம் அல்லது புதிய யாப்பு அவசியமென்பதால் யாப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ளக் கூடியவாறு தேசிய, மாகாண மற்றும் பிரதேச அடிப்படையில் அரசியல் பிரதிநிதித்துவமொன்று தேவைப்படும் சகல மட்டங்களிற்கும் ஏற்புடைய எல்லை நிர்ணயத்துடன் தொடர்பான கோட்பாடுகள் தொடர்பான பூர்வாங்க ஆராய்ச்சியொன்றை எல்லை நிர்ணய ஆணைக்குழு ஆரம்பிப்பதற்கு அரசியலமைப்பு பேரவைக்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

# 3. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிருவாகம்

## 3.1. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பான பூர்வாங்க அலுவல்கள்.

தனது பணிகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்துமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் அரசியலமைப்பு பேரவைக்கு கோரிக்கையொன்று சமர்ப்பிக்கபட்ட பின்னர் குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக 2016.09.01 ஆம் திகதி கூட்டமொன்றுக்காக அரசியலமைப்பு பேரவையினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

- எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலக வசதிகள்
- எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு பணியாட் குழுவினரை நியமனம் செய்தல்
- 2016 ஆம் ஆண்டுக்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள்

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக எல்லை நிர்ணய ஆணைக்குழு உடனடியாக் தீர்மானங்களை எடுக்க வேண்டுமென அங்கு இணக்கம் காணப்பட்டது.

- அலுவலக வசதிக்காக இடமொன்றை ஒழுங்கு செய்து கொள்ளல்.
- பணியாட் குழுவின் தேவைகள் தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்
- செலவுகளுக்காக வரவு செலவுத் திட்ட ஆவணமொன்றைப் பொதுத் திறைசேரியிடமிருந்து அனுமதித்துக் கொள்ளல்

**துரித அமுலாக்கல் திட்டத்தில் பின்வரும் விடயங்கள் உட்சேர்க்கப்பட்டன.**

- அலுவலக வசதிகளைச் செய்து கொள்ளல்
- வங்கிக் கணக்கொன்றைத் திறத்தல்
- பணியாட்குழுவினரை நியமனம் செய்தல்
- அலுவலக உபகரணங்கள் - தளபாடம், கணினி, புகைப்பட பிரதி இயந்திரம் என்பவற்றைக் கொள்வனவு செய்து கொள்ளல்.

இந்த நிருவாக விடயங்கள் ஆற்றப்படும் வரை அங்கத்தவர்களின் வீடுகளில் கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்னர் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நில அளவைத் திணைக்களத்தின் கட்டித்தில் ஆணைக்குழுவின் அலுவலகம் ஆரம்பிக்கப்படும்வரை இவ்வாறு 13 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 3.2. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கூட்டங்கள்

2015.11.13 ஆம் திகதி தொடக்கம் 2016.12.31 ஆம் திகதி வரை கீழே காட்டப்பட்டுள்ளவாறு 15 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் கூட்டம் | 2015.11.19 | 9 ஆம் கூட்டம் | 2016.06.08 |
| 2 ஆம் கூட்டம் | 2015.12.21 | 10 ஆம் கூட்டம் | 2016.07.26 |
| 3 ஆம் கூட்டம் | 2016.01.13 | 11 ஆம் கூட்டம் | 2016.08.29 |
| 4 ஆம் கூட்டம் | 2016.01.29 | 12 ஆம் கூட்டம் | 2016.09.28 |
| 5 ஆம் கூட்டம் | 2016.02.29 | 13 ஆம் கூட்டம் | 2012.10.26 |
| 6 ஆம் கூட்டம் | 2016.03.17 | 14 ஆம் கூட்டம் | 2016.11.25 |
| 7 ஆம் கூட்டம் | 2016.04.05 | 15 ஆம் கூட்டம் | 2016.12.30 |
| 8 ஆம் கூட்டம் | 2016.04.27 | | |

### 3.3. அலுவலக வசதிகள் மற்றும் தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள்

**அலுவலக வசதிகள்:** கடமை வசதிக்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு நில அளவைத் திணைக்களம் அல்லது தேர்தல்கள் திணைக்களத்திற்கு அண்மையில் இடமொன்றைத் தெரிவு செய்து கொள்வது முக்கியமானதென அங்கத்தவர்கள் இணக்கம் கண்டனர். நில அளவைத் திணைக்களத்தில் போதியளவு இடவசதி இருக்கின்ற காரணத்தாலும் நில அளவையாளர் நாயகம் அலுவலக இடவசதியை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்தமையாலும் அத்திணைக்களத்தின் கட்டிடத்தில் தமது அலுவலகத்தைத் தாபிப்பதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழு தீர்மானித்தது. இக்கட்டிடத்தில் 790 சதுர அடிகள் காணப்பட்டதோடு தேவைக்கேற்றவாறு மூன்று அறைகளாக வேறுபிரிக்க முடிந்தது. வேறுபிரிப்பை நில அளவைத் திணைக்களத்தின் செலவு விடயத்தின் கீழ் செய்து தருவதற்கு நில அளவையாளர் நாயகம் இணக்கம் தெரிவித்தார். அதன் வசதிகள் ,மின்சாரம், தண்ணீர் வசதிகள்,

வாகன நிறுத்துமிட வசதிகள் போன்ற விடயங்களைக் கருத்திற் கொண்டு அவற்றுக்கு நியாயமான வாடகையொன்றை விதிக்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழு நில அளவையாளர் நாயகத்திடம் கோரியது. அது தொடர்பில் அரசியல் அமைப்பு பேரவையினால் உத்தியோகபூர்வ கோரிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் அமைப்பு பேரவையினால் Cc/delc/1 ஆம் இலக்க மற்றும் 2016.02.11 ஆம் திகதி கடிதமொன்று நில அளவையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 6 மாதங்கள் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததோடு 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாத்திற்கான எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 14 ஆம் கூட்டத்தை நடாத்துவற்கு தயார் நிலையில் காணப்பட்டது.

**தற்போதைய முகவரி:**

**எல்லை நிர்ணய ஆணைக்குழு**

**நில அளவையாளர் நாயக அலுவலகக் கட்டிடம்**

**அஞ்சல் பெட்டி எண் 506**

**கொழும்பு 05.**

**அலுவலக உபகரணங்கள்**: 2016 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கட்ட வரவு செலவுத்திட்ட வரைவு ( 4 ஆம் பிரிவைப் பார்க்கவும்) சனாதிபதி செயலககத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டு நான்காம் காலண்டில் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கு முடிந்தது.

**போக்குவரத்து வசதிகள்:** 2016 ஆம் ஆண்டில் திறைசேரியினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு இரண்டு மோட்டார் வாகனங்கள் குறித்தொதுக்கி வழங்கப்பட்டுள்ளது. இவை சனாதிபதியின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. சனாதிபதி செயலகத்தினால் காப்புறுதி செய்யப்பட்டிருந்த CAP 7180 ஆம் இலக்க வாகனம் சனாதிபதி அலுவலகத்தினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு இணைப்புச் செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் இவ்வாகனத்திற்கு சாரதியொருவர் தேர்தல் ஆணைக்குழுவினால் தற்காலிகமாக பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு, நில அளவைத் திணைக்களத்தின் காணியில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு நில அளவையாளர் நாயகத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டாவது வாகனமாக 2016 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாத்தில் CAR 0347 வாகனமொன்று சனாதிபதி செயலகத்தினால் இணைப்புச் செய்யப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் இரண்டாவது மோட்டார் வாகனத்திற்குப் பதிலாக டபள் கெப் வாகனமொன்றைப் பெற்றுத் தருமாறு திறைசேரியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இருப்பினும் அக்கோரிக்கையை நிறைவேற்ற முடியாதென திறைசேரியினால் அச்சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3.4 . எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு பணியாட்குழுவினரை நியமனம் செய்தல்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்களின் அளவைக் கருத்திற் கொண்டு 2016.02.05 ஆம் திகதிய DMS/1029 கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பின்வரும் பதவிகள் அனுமதிக்கப்பட்டன.

| பதவி | மட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு |
|---|---|---|---|
| செயலாளர் | சிரேட்ட | 01 | SL-3-2006 |
| கணக்காளர் | சிரேட்ட | 01 | SL-1-2006 |
| இணைப்புச் செயலாளர் | மூன்றாம் நிலை | 01 | MN-7-2006 |
| நிருவாக அலுவலர் | மூன்றாம் நிலை | 01 | MN-7-2006 |
| மொழிப்பெயர்ப்பாளர் | இரண்டாம் நிலை | 03 | MN-6-2006 |
| தகவல் தொழிநுட்ப உதவியாளர் | இரண்டாம் நிலை | 02 | MT-1-2006 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | இரண்டாம் நிலை | 02 | MN-2-2006 |
| சாரதி | ஆரம்ப நிலை | 02 | PL-3-2006 |
| அலுவலக கனிட்ட ஊழியர் | ஆரம்ப நிலை | 02 | PL-1-2006 |
| மொத்தம் | | 15 | |

வருடத்தினுள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு பின்வரும் பணியாட்குழுவினர் நியமனம் செய்யப்பட்டனர்.

(அ) எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் DC/Cadre/4/2 ஆம் இலக்க கடித்தின் மூலம் 2016.03.15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வித்தில் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க அவர்கள் பகுதி நேர அடிப்படையில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார்.

(ஆ) எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் DC/Cadre/4/3 ஆம் இலக்க கடித்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் கணக்காளர் திரு. எச்.டப்ளிவ்.என் குமார அவர்கள் 2016.03.28 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வித்தில் பகுதி நேர அடிப்படையில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கணக்காளராக நியமனம் செய்யப்பட்டார்.

(இ) நில அளவையாளர் நாயகத்தின் 2016.04.01 ஆம் திகதிய CG/1/2/7/363 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நில அளவைத் திணைக்களத்தின் திரு. நளின் குசும்சிறி அவர்கள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இணைப்பு செயலாளராகக் கடமையாற்றுவதற்காக விடுவிக்கப்படட்டார். திரு. நளின் குசும்சிறி அவர்கள்

2016.03.28 ஆம் திகதிய DC/Cadre/4/5 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார்

(ஈ) நிருவாக அலுவலர் ஒருவர் மற்றும் அரச முகாமைத்துவ அலுவலர்கள் இன்றி ஆணைக்குழுவின் பணிகளை மேற்கொள்வதிலுள்ள வசதியீனங்கள் காரணமாக இரண்டு அரச முகாமைத்துவ அலுவலர்கள் மற்றும் ஒரு சாரதியைப் பெற்றுத் தருமாறு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டது. 2016.07.04 ஆம் திகதி இரண்டு அரச முகாமைத்துவ அலுவலர்கள் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு இணைப்புச் செய்யப்படனர். அவர்கள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் தேர்தல்கள் திணைக்களத்தில் பயிற்சி பெற்றனர்

அதற்கமைய 2016.12.31 ஆம் திகதிக்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணியாட்குழுவினரின் உள்ளடக்கம் பின்வருமாறு.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட | நிரப்பப்பட்ட | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 1 (பகுதி நேரம்) | - |
| கணக்காளர் | 01 | 1 (பகுதி நேரம்) | - |
| இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| நிருவாக அலுவலர் | 01 | 0 | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | 03 | 0 | 03 |
| தகவல் தொழிநுட்ப உதவியாளர் | 02 | 0 | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 | 02 | - |
| சாரதி | 02 | 0 | 02 |
| அலுவலக கனிட்ட ஊழியர் | 02 | 0 | 02 |
| மொத்தம் | 15 | 05 | 10 |

## 3.5. மும்மாத முன்னேற்ற அறிக்கை

அரசியலமைப்புப் பேரவையினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு சனவரி - மார்ச், ஏப்ரல் - யூன் , யூலை – செப்தெம்பர் ஆகிய மூன்று காலாண்டுகளுக்குரிய முன்னேற்ற அறிக்கைகள் கோரப்பட்டன. குறித்த தினங்களில் அரசியலமைப்புப் பேரவைக்கு அவ்வறிக்கைகள் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

## 4. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிதி அலுவல்கள்

2016 ஆம் ஆண்டுக்காக 16.2 மில்லியன் ரூபா வரவு செலவுத்திட்ட முன்மொழிவு ( மீண்டெழும் செலவுகள் 15.4 மில்லியன் ரூபா மற்றும் மூலதனச் செலவு 800,000 ரூபா - இணைப்பு - 1) சனாதிபதி செயலாளர் அலுவலகத்திற்குப் பிரதியொன்று சகிதம் அரசியலமைப்புச் சபைக்கு முதலாம் காலாண்டின் போது அனுப்பி வைக்கப்பட்டது.

2016.03.16 ஆம் திகதி சனாதிபதி அலுவலகத்தின் செலவு விடயத்தின் கீழ் மீண்டெழும் செலவாக 01-01-02-1405 இன் கீழ் 10,000,000 ரூபாவும் மூலதனச் செலவு 01-01-02-2501 விடயத்தின் கீழ் 800,000 ரூபாவும் என்றவாறு 10.8 மில்லியன் ரூபா திறைசேரியினால் அனுமதிக்கப்பட்டது. மூலதனச் செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு போதாமை காரணமாக அதற்காக 250,000 ரூபா கோரப்பட்டதுடன் 2016.11.23 ஆம் திகதி அவ்வொதுக்கீடு வழங்கப்பட்டது.

எல்லை நிர்ணய ஆணைக்குழு 2015.11.13 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்ட போதும் அதன் அங்கத்தவர்கள் அவர்களுக்குரிய படிகள் தொடர்பான கொடுப்பனவுகளை 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்வது போதுமானதென இணக்கம் தெரிவித்தனர். அத்தோடு சுயாதீன ஆணைக்குழுக்களின் தவிசார்கள் மற்றும் அங்கத்தவர்களின் படிகளில் சிறு சிறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமென சனாதிபதி செயலாளர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்ட பின்னர் மாற்றங்கள் அறிவிக்கப்படும் வரை அப்படிகள் கொடுப்பனவு செய்வது பிற்போடப்பட்டது. தவிசாளர் மற்றும் அங்கத்தவர்களிற்கு படிகள் வழங்கப்படுகின்ற முறை தொடர்பாக அமைச்சரவை அனுமதி 2016 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வெளியிடப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற 2.0 மில்லியன் ரூபாவுக்காக 2015.05.10 13 ஆம் திகதி நாரன்ஹேன்பிட்ட இலங்கை வங்கிக் கிளையில் 7042792 ஆம் இலக்க வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது. தவிசாளர், அங்கத்தவர்கள், பணியாட்குழுவினர் ( செயலாளர், கணக்காளர் மற்றும் இணைப்புச் செயலாளர்) ஆகியோருக்கு கொடுப்பனவு செய்தல் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு அரச முகாமைத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்படும் வரை எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கணக்குகளைப் பேணிவருதல், எழுத்தாவணங்களைத் தயாரித்து கணினித் தட்டெழுத்துச் செய்து அனுப்புதல், நிருவாக அலுவல்களை மேற்கொள்ளல் என்பவற்றுக்காக தேர்தல் ஆணைக்குழுவின் அரச முகாமைத்துவ அலுவலரொருவரின் உதவி மேலதிக வேலை நேர அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**செலவுகள்:**

**2016 ஆம் ஆண்டின் செலவு 7.2 மில்லியன் ரூபாவாகும். அதில் மீண்டெழும் செலவுகள் 6.2 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவுகள் 1.0 மில்லியன் ரூபாவும் உள்ளடங்கும்**

| செலவு விடயம் | ஒதுக்கீடு | செலவு | மீதி | மீதி % |
|---|---|---|---|---|
| 01-01-02-1405 | 10,000,000.00 | 6,209,380.32 | 3,790,619.68 | 38% |
| 01-01-02-2501 | 1,050,000.00 | 1,031,665.64 | 18,334.36 | 2% |
| மொத்தம் | 11,050,000.00 | 7,241,045.96 | 3,808,954.04 | 34% |

அலுவலக உபகரணங்கள் செலவு ( இணைப்பு – 2) வரவு செலவுத் திட்டத்தில் 98% ஆகும். மீண்டெழும் செலவுகள் 38% வீதம் மீதமடைவதற்குக் காரணம் பின்வருமாறு.

- எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்ட பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக தெளிவான பணிப்பொறுப்புக்கள் இல்லாமையினால் அதனுடன் தொடர்பான எரிபொருள் மற்றும் போக்குவரத்துத் தொடர்பில் குறைவான செலவு நிலைமையொன்று காணப்படுகின்றது.
- நில அளவைத் திணைக்களத்திடமிருந்து அலுவலக வசதிகளைப் பெற்றுக் கொண்டமையினால் வாடகைக் கொடுப்பனவு மற்றும் வசதிகளுக்கான கொடுப்பனவுகளில் மீதியொன்று காணப்படுகின்றது. சிரேட்ட பதவிகள் 2 இற்காக நிரந்தர அலுவலர்களுக்குப் பதிலாக பகுதி நேர அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டமை காரணமாக அதில் மீதம் ஏற்பட்டுள்ளது.
- அனுமதிக்கப்பட்ட 10 பதவிகளுக்காக நியமனம் செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதில் குறைவான செலவு நிலைமையொன்றைக் காட்டுகின்றது.
- சுயாதீன ஆணைக்குழுக்களின் அங்கத்தவர்களிற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய படிகளில் மாற்றங்கள் ஏற்பட்டமை காரணமாக அக்கொடுப்பனவுகளில் மாற்றமொன்று காணப்படுகின்றது.

## 5. கொள்கை ரீதியான விடயங்கள்

### 5.1. 2016 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

ஆண்டின் முதலாம் காலாண்டின் போது இலங்கையின் எல்லை நிர்ணயம் தொடர்பான வரலாறு, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிச்சயிக்கப்பட்ட பணிப்பொறுப்புக்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளுக்கான திட்டமொன்றின் தேவைப்பாடு என்பன தொடர்பாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அங்கத்தவர்களிடையே மின்னஞ்சல் மூலம் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. தவிசாளரினால் தொகுக்கப்பட்ட எழுத்தாவணங்கள் மற்றும் முதலாவது எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்ட 1946 இலங்கை அரசியலமைப்பு தொடக்கம் ஏனைய அரசியலமைப்புக்களுக்குரியதாக உத்தியோகபூர்வ இணையத்தளங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் உதவியோடு தயாரிக்கப்பட்ட எல்லை நிர்ணயக் கொள்கை மற்றும் அடிப்படைப் பணிக் கட்டமைப்பு தொடர்பான வரைவொன்று கலாநிதி டயஸ் பண்டாரநாயக்க அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணியாட் குழுவினரைக் கொண்டு கீழே காட்டப்பட்டுள்ள பூகோள எல்லைகளை மீள வரைவதற்கான முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டது.

1. பாராளுமன்றத் தேர்தல்கள் மாவட்ட எல்லைகள்
2. மாகாண சபைத் தேர்தல்கள் மாவட்ட எல்லைகள்
3. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் அதிகாரப் பிரதேச எல்லைகள் (மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள்)

இதற்கு அமைவாக இலங்கையின் தேர்தல்கள் மாவட்ட எல்லை நிர்ணயம் மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பான வரலாறு தொடர்பான பின்னணி என்பவற்றை உள்ளடக்கிய பத்திரமொன்று தவிசாளர் அவர்களால் தயாரிக்கப்பட்டது. ஏனைய நாடுகளின் சரித்திர முக்கியத்துவம் கொண்ட எல்லை

நிர்ணயம் தொடர்பான அனுபவங்களை மையமாகக் கொண்டு ஒரு பத்திரத்தைத் தயாரிக்கும் பொறுப்பு பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் அவர்களுக்கு கையளிக்கப்பட்டது. ஏனைய இரு அங்கத்தவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் தனது பத்திரத்தைத் மேலும் தயாரிக்கும் பொறுப்பு கலாநிதி டயஸ் பண்டாரநாயக்க அவர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டது.

தற்போதுள்ள தேர்தல்கள் மற்றும் நிருவாக முறைமையின் கீழ் சனத்தொகை மற்றும் நிலப் பிரதேசங்களுக்குரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டது. அதன் பின்னர் மேற்படி விடயங்களுக்குரிய அடிப்படை விடயங்கள் மற்றும் பணிகளுக்கான கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. இருப்பினும் நாட்டின் தேர்தல் மாவட்டங்கள் மற்றும் நிருவாகப் பிரதேச எல்லைகளை நிர்ணயம் செய்தல் தொடர்பாக பல்வேறு விதமான சட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் உயர்ந்த பட்ச நன்மைக்காக அந்த ஏற்பாடுகளைத் தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது. இப்பணிகள் தொடர்பாக அரசியலமைப்பு திருத்தம் மூலம் “ எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகள் விரிவாக்கம் செய்தல்” தொடர்பான முன்மொழிவொன்று மூன்றாம் காலாண்டின் போது அரசியலமைப்பு பேரவையின் தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ( இணைப்பு -3) இந்த முன்மொழிவு “புதிய யாப்புத் தயாரிக்கப்படுகின்ற போது அல்லது தற்போதுள்ள அரசியலமைப்பை திருத்தம் செய்கின்ற போது எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்” தொடர்பாக தவிசாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட இணைப்பொன்று சகிதம் அரச சேவைகள் தொடர்பான உப குழுவின் தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முன்மொழிவு உபகுழுவினால் ஆராய்ந்து பார்க்கப்பட்டது. அரசியல் யாப்பு வரைவைத் தயாரிக்கின்ற வழிநடாத்தல் குழுவின் அவதானத்திற்குக் கொண்டு வருவதற்காக “ இலங்கையின் எல்லை நிர்ணயம் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் கட்டமைப்பு” என்ற கடிதமொன்று ( இணைப்பு – 5 ) அக்குழுவின் தலைவர் கௌரவ பிரதமர் அவர்களுக்கு 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழு இந்த அனைத்து முன்மொழிவுகள் தொடர்பான முடிவுகளை (பதிலை) எதிர்பார்த்தவண்ணம் உள்ளது.

### 5.2. மக்களிடமிருந்த கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற மக்களின் பதில்கள்

(அ) ராகம தேவத்த இல 546 திரு. றொபட் அந்தோனி (சமாதான நீதிவான்) அவர்கள் புதிய பாராளுமன்றத் தேர்தல் மாவட்டமொன்றை தாபித்தல் தொடர்பாக முன்வைத்த முன்மொழிவு: திரு. றொபட் அந்தோனி அவர்கள் ராகமைக்கு தனியான பாராளுமன்றத் தேர்தல் மாவட்டமொன்றை தாபித்தல் தொடர்பாக முன் மொழிந்து அதிமேதகு சனாதிபதி மற்றும் ஏனையவர்களுக்கு பிரதிகள் சகிதம் கௌரவ சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அவரின் முன்மொழிவு தொடர்பாக தேர்தல் மாவட்ட எல்லை நிர்ணய அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது ஆராய்ந்து பார்க்கப்படுமென அவருக்கு பதில் அனுப்பி வைப்பதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) புதிய தேர்தல் மாவட்டமொன்றை தாபித்தல் தொடர்பாக இளைப்பாறிய அதிபர் திரு. ஜீ.டீ. ரத்நாயக்க அவர்களின் முன்மொழிவு: தற்போதைய கொலொன்ன தேர்தல் மாவட்டத்தை இரண்டு தேர்தல் மாவட்டங்களாக பிரிக்குமாறு திரு. ஜீ .டீ. ரத்நாயக்க அவர்கள் முன்மொழிந்துள்ளார். எல்லை நிர்ணய அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அவரது கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படுமென அவருக்கு பதில் அனுப்பி வைப்பதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது

## 5.3 நோக்கு மற்றும் பணிக்கூற்று மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான அமுலாக்கல் திட்டம்.

எல்லைகள் (தேர்தல்கள் மற்றும் நிருவாகம்) நிர்ணயம் செய்தல் நியதிச்சட்ட தேவைப்பாடு ஒன்றாகும். ஆதலால் அவ்வெல்லைகள் நிர்ணயம் தொடர்பான தேவைப்பாடுகள் மற்றும் அளவுகோல்கள் தெளிவாக அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட வேண்டும். ஆகவே தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் ஆற்றப்பட வேணடிய பணிகள் தொடர்பில் தெளிவான வழிகாட்டல் அரசியல் அமைப்புத் திருத்தமொன்று அவசியமாகும்.

தேர்தல்கள் மாவட்ட எல்லை நிர்ணயம் செய்தல் செயற்பாடுகளில் இரண்டு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. சட்டவாக்க சபையின் ஆசனங்களின் எண்ணிக்கையை பிரதேச அலகுகளுக்கு அமைவாக மாவட்டங்கள் அல்லது மாகாணங்களுக்கு உரித்தாகும் விதத்தைத் தீர்மானித்தல் முதலாவது சந்தர்ப்பமாகும். அந்தந்த மாவட்டங்களின் அல்லது மாகாணங்களின் சனத்தொகைக்கு அமைவாக ஆசனங்கள் குறித்தொதுக்கப்படும் இச்சந்தர்ப்பம் பொறிமுறைச் செயற்பாடு ஒன்றல்ல. எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் கலந்துரையாடல்களுக்கு அமைய ஆசனங்களை குறித்தொதுக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய ஒரே விடயம் சனத்தொகை மாத்திரமல்ல என்பது தெரியவந்துள்ளது. அந்தந்த சனத்தொகையினுள் தமது எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக காணப்படுகின்ற பல்வகைமை மற்றும் அந்தந்த மாவட்டத்தினுள் காணப்படுகின்ற காணியின் அளவு மற்றும் போக்குவரத்துச் செய்வதில் தாக்கம் செலுத்தும் பூகோள வேறுபாடுகள் தொடர்பான விடயங்கள் என்பனவும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாகும். இவ்விடயங்கள் தொடர்பாக கருத்தில் கொள்ள வேண்டிய நியதிகள் அரசியலமைப்பில் அல்லது சட்டங்களில் காணப்படும். இரண்டாவது நடவடிக்கையாக அமைவது தற்போதுள்ள தேர்தல்கள் மாவட்டங்களின் எல்லைகளை மாற்றம் செய்தல் / அல்லது மாவட்டம் அல்லது மாகாணத்தினுள் புதிய தேர்தல்கள் மாவட்டமொன்றை ஏற்படுத்துவதாகும். இது பொதுவாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும். ஆதலால் அந்த இரண்டாம் கட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் முதலாம் கட்டத்திற்குரிய கோட்பாடுகள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு புதிய அரசில் அமைப்பில் திட்டவட்டமாக தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

வருடத்தினுள் அரசியல் திட்ட மாற்றமொன்று மேற்கொள்ளப்படவில்லையென்பதால் 2017 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டத்தைத் தயாரிக்கும் போது எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் தெளிவின்மையால் ஆணைக்குழுவின் நோக்கு மற்றும் பணிக்கூற்றைத் தயாரிப்பது மிகவும் சிரமமானதாக உள்ளது. வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது திறைசேரிக்கு அவசியமென அறிவிக்கப்பட்டமையினால் எல்லை நிர்ணய

ஆணைக்குழுவின் நோக்கு மற்றும் பணிக்கூற்று , இலக்குகள் மற்றும் முன்னேற்ற அளவீட்டு குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு உட்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்சி மற்றும் வாதப்பிரதி வாதங்கள் ஊடாக பெற்றுக் கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எல்லை நிர்ணய ஆணைக்குழு அதன் நோக்கு மற்றும் பணிக்கூற்று மற்றும் இலக்குகள் என்பவற்றை காலத்துக்கு உகந்த வித்தில் மாற்றம் செய்து கொண்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 2017 ஆம் ஆண்டுக்கான அமுலாக்கல் திட்டத்தை தயாரிக்கும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களை உட்சேர்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. தகவல்களைச் சேகரித்தல் ( உள்ளூர் அதிகார சபைகளைத் தாபித்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் அனைத்தையும் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.)

2. இலங்கையின் தற்போதைய சனத்தொகை மற்றும் காணியின் முதன்மைத்துவம் தொடர்பாக ஆராந்து பார்ப்பதற்குத் தேவையான முன்னைய எல்லை நிர்ணய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

3. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேசிய எல்லலை நிர்ணயக் குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கையின் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.

## 6. நன்றி நவிலல்


எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்கள்.

1. எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு மற்றும் அதன் பணியாட்குழுவினருக்கு உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கு அலுவலக இடவசதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்கியமைக்காக நில அளவையாளர் நாயகத்திற்கும்,

2. அலுவலர்களை விடுவித்தல், பணிக்குழுவினரை பயிற்றுவித்தல் போன்ற பல பணிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மற்றும் தேவைப்பாடுகளை தீர்த்துத் தந்தமைக்காக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு மற்றும் பணிக் குழுவினருக்கு,

3. தேவையான ஒதுக்கீடுகள் மற்றும் வாகனம் போன்றவற்றை வழங்குவதில் ஒத்துழைப்பு வழங்கிய சனாதிபதி செயலாளர் உள்ளிட்ட மற்றும் சனாதிபதி செயலகத்தின் பணியாட் குழுவினர் மற்றும் திறைசேரியின் பணியாட் குழுவினர்.

4. தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசியலமைப்புச் பேரவையின் தவிசாளர் உள்ளிட்ட அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

**இணைப்பு 1**

## 2016 வரவு செலவுத்திட்ட வரைவு

| விபரம் | | மொத்தம் (ரூபா) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவுகள்** | | |
| | | |
| **சொந்தப் படிகள்** | | |
| 1001 | சம்பளம் மற்றும் வேதனங்கள் | 7,393,380.00 |
| 1002 | மேலதிக வேலை நேரம் மற்றும் விடுமுறை தினச் சம்பளம் | 25,000.00 |
| 103 | வேறு படிகள் | 4,030,548.00 |
| **பயணச் செலவுகள்** | | |
| 1101 | உள்நாட்டு | 50,000.00 |
| **வழங்கல் செலவுகள்** | | |
| 1201 | எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 100,000.00 |
| 1202 | எரிபொருட்கள் | 1,354,860.00 |
| 1203 | வேறு | |
| **பராமரிப்புச் செலவுகள்** | | |
| 1301 | வாகனங்கள் | 00 |
| 1302 | இயந்திர உபகரணங்கள் | 25,000.00 |
| **சேவைகள்** | | |
| 1401 | போக்குவரத்து | 1,800,000.00 |
| 1402 | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 250,000.00 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 75,000.00 |
| 1404 | வாடகை மற்றும் உள்நாட்டு வரி | 300,000.00 |
| 1405 | வேறு | |
| **மாற்றல்கள்** | | |
| 1505 | அங்கத்துத் தொகை மற்றும் பங்களிப்புத் தொகை | 00 |
| 1506 | அரச அலுவலர்களுக்கான ஆதனக் கடன் | 00 |
| **மீண்டெழும் செலவுகள் மொத்தம்** | | 15,403,788.00 |
| **மூலதனச் செலவுகள்** | | |
| | | |
| **மூலதனச் சொத்துக்களை கையேற்றல்** | | |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 800,000.00 |
| 2104 | கட்டிடங்கள் மற்றும் நிர்மானம் | 00 |
| **திறன் விருத்தி** | | |
| 2401 | பணியாட்குழுவினர் பயிற்சி | 00 |
| **மூலதனச் செலவுகள் மொத்தம்** | | **800,000.00** |

| | | |
|---|---|---|
| **செலவுகள் முழு மொத்தம்** | | **16,203,788.00** |

**இணைப்பு - 2**

## 2016.12.31 ஆம் திகதிக்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்

| விடயம்/பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|
| கணினி – உதிர்ப்பாகங்கள் சகிதம் | 02 |
| யூ பீ எஸ் (UPS) | 02 |
| அச்சிடல் பொறி ( printer) | 01 |
| புகைப்படப் பிரதி இயந்திரம் | 01 |
| தொலைநகல் இயந்திரம் | 01 |
| இரும்பு அலுமாரி | 03 |
| கணிப்பான் | 02 |
| நிறைவேற்று அலுவலர் கதிரை ( குசன் சகிதம்) | 03 |
| நிறைவேற்று அலுவலர் மேசை ( பெரிய) | 03 |
| நிறைவேற்று அலுவலர் மேசை ( சாதாரனம்) | 03 |
| நிறைவேற்று அலுவலர் கதிரை ( சாதாரனம்) | 02 |
| கணினி மேசை | 02 |
| கணினி மேசைக்கான கதிரை | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் மேசை | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் கதிரை | 02 |
| நிருவாக அலுவலர் கதிரை | 02 |
| வரவேற்பு மண்ட கதிரை | 06 |
| மின்சாரக் கேத்தல் | 01 |

## இணைப்பு - 3

2016.07.07

எனது இல :- DC/SC/PowersDC/1

கௌரவ கரு ஜயசூரிய,
தவிசாளர்,
அரசியலமைப்புப் பேரவை,
சபாநாயகர் அலுவலகம்,
பாராளுமன்றக் கட்டிடத் தொகுதி,
சிறிஜயவர்தனபுரம்,
கோட்டை.

கௌரவ தவிசாளர் அவர்களுக்கு,

**<u>எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் என்பவற்றை அரசியலமைப்புத் திருத்தம் மூலம் விரிவுபடுத்தல்.</u>**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தத்தின் மூலம் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு அரசியலமைப்பின் 41ஆ மற்றும் 95 (1) ஆம் உறுப்புரைகளின் கீழ் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டது. அவ்வாணைக்குழு தேர்தல்கள் முறைமை, பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மற்றும் தேர்தல்கள் மாவட்டங்களை மீள நிர்ணயம் செய்தல் நியதிகள் தொடர்பான அலுவல்களை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தின் சட்டமொன்றின் மூலம் அதிகாரம் கிடைக்கப்பெறும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளது.

அத்தோடு ஆரம்பத்திலிருந்து ஆணைக்குழுவிற்கு நிரந்தர அலுவலகமொன்றை தாபித்துக் கொள்ளும் நிருவாக ரீதியான தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொள்வதற்கும் உலகின் ஏனைய நாடுகளின் எல்லை நிர்ணய அலுவல்கள் தொடர்பான அனுபவங்கள், வரலாறு மற்றும் இலங்கையின் முன்னைய எல்லை நிர்ணயங்களின் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணங்கள் பற்றியும் ஆய்வு செய்து வருகின்றது. கடந்த காலங்களின் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது பாராளுமன்ற ஆசனங்கள், உள்ளூராட்சி பிரதேச மற்றும் நிருவாகப் பிரதேசங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் பொறுப்பு வெவ்வேறு நிறுவனங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளதாக அதன் போது ஆணைக்குழுவிற்கு அறிந்து கொள்வதற்கு முடிந்துள்ளது. ஒவ்வொரு மட்டங்களையும் சேர்ந்த மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம், சேவை வழங்கல், தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பில் வினைத்திறமின்மை மற்றும் முரண்பாடுகள் அதன் மூலம் ஏற்பட்டுள்ளது. தற்போது 336 உள்ளூர் அதிகார சபைகள் காணப்படுகின்ற போது 160 பாராளுமன்ற வாக்கொடுப்பு பிரிவுகள் காணப்படுகின்றன. அதேபோன்று 25 மாவட்டங்களில் 331 பிரதேச செயலகங்களுக்குள் 14021 கிராம அலுவலர் பிரிவுகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. ஏனைய முக்கிய அரச சேவைகளில் 340 சுகாதார மருத்துவ அலுவலர் பிரிவுகளும், 331 கல்வி வலயங்களும், 439 பொலிஸ் பிரிவுகளும் காணப்படுவதோடு இவற்றில் சில சேவைப் பிரிவுகள் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகளை விடவும் தாண்டிச் செல்கின்றன. அனைத்து சேவைத் துறைகளினதும் பதவி மற்றும் நிலப்பிரதேசத்திற்கமைய அந்தந்த பிரிவுகளில் சமமின்மை அபிவிருத்திச் செயற்பாடுகளில் மற்றும் அமைச்சுக்கள் அரச திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஒன்றிணைப்பில் பாதகமான விதத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. அதற்கு மேலதிகமாக ஒரே விதமான நிருவாகப் பிரிவுகளிடையேயும் கணிசமானளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக சிறிய நிருவாக அலகான கிராம அலுவலர் பிரிவில் மட்டக்குளிய கிராம அலுவலர் பிரிவு 2 சதுர கிலோ மீற்றர் என்பதோடு சனத்தொகை 28000 ஆகும். 560 ச.கி.மீ கொண்ட பானமை கிராம அலுவலர் பிரிவின் சனத் தொகை 1,209 என்பதோடு, சனத்தொகை 100 விடக் குறைந்த பல கிராம அலுவலர் பிரிவுகளும் காணப்படுகின்றன. (2012 சனத் தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு) நிருவாக ரீதியான பிரதேசங்களை அழைப்பதற்கு (பெயர் குறிக்க) வெவ்வேறு திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் ஒரே விதமான வழிமுறையொன்றைப் பின்பற்றாமை காரணமாக பொதுமக்களுக்குப் போன்றே நிருவாகிகளுக்கும் வசதியீனங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக: தேர்தல் ஆணைக்குழுவின் தேர்தல்கள் மாவட்டங்கள் 22 காணப்படுவதோடு அரச நிருவாக முறையில் 25 மவட்டங்கள்

காணப்படுகின்றன. நிருவாக முறையில் மாவட்டமொன்றின் நில அளவு ஆயிரக்கணக்கான சதுர கிலோ மீற்றர்களை உள்ளடக்கியுள்ளதோடு, அது மாகாணத்தை விட நில அளவில் குறைவானதாகும்.

தேர்தலொன்றினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் நிருவாகப் பிரதேசங்களை எல்லை நிர்ணயம் செய்யும் போது, காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வதற்கும் திருத்தம் செய்வதற்கும் தேவைப்படக் கூடிய நிரந்தர கொள்கைக் கட்டமைப்பொன்றினுள் செயற்படக் கூடிய நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிரந்தர கட்டமைப்பொன்று அவசியமாகும். நாட்டின் சனத்தொகை உள்ளடக்கம் அடிக்கடி மாற்றமடைவதால் உள்ளூர் அதிகார சபைகள் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை) ஏற்படுத்தல், ஒன்றிணைத்தல் மற்றும் தரமுயர்த்தல், குறிப்பாக தேசிய சனத்தொகை கணக்கெடுப்பின் பின்னர் செய்ய வேண்டிய தொடர் செயற்பாடொன்றாகும். புதிய உள்ளூர் அதிகார சபைகளுக்கான பல கொள்கைகள் ஏற்கனவே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அனுமதியை எதிர்பார்த்துக் காணப்படுகின்றன. தற்போதைய முறைமை யாதெனில் அரசாங்கத்தினால் (அமைச்சரால்) தனிநபர் அல்லது பலரைக் கொண்ட குழுவொன்றை ஒவ்வொரு கோரிக்கை தொடர்பாகவும் ஆராய்ந்து பார்ப்பதற்காக நியமனம் செய்வதாகும். இம்முறை மூலம் சமமான தன்மையொன்று ஏற்பட மாட்டாது. அவ்வாறான அனைத்து கோரிக்கைகளையும் ஒரு எல்லை நிர்ணயக் குழுவிற்கு கையளிக்கப்படுமாயின் வரையறுக்கப்பட்ட கொள்கை மற்றும் சமநிலைத்தன்மை கொண்ட நியாயமான அளவுகோலொன்றை அதற்காக ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இப்பின்னணிக்கு அமைய தேர்தலொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் என்பனவற்றிக்குரிய எல்லைகளை நிர்ணயம் செய்யும் அலுவல்களுக்காக சட்டரீதியாக அதிகாரம் கையளிக்கப்பட்ட ஒரு எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நியமனம் செய்யுமாறு முன்மொழிவொன்றைச் ஆணைக்குழு சமர்ப்பிக்கின்றது. மக்கள் பிரதிநிதித்துவத்திற்கு மேலதிகமாக ஏனைய அனைத்து அரச சேவைகளுக்கும் (கமநல சேவை, கல்வி, சுகாதாரம், நீதி மன்றம், பொலிஸ், அரச நிருவாகம் போன்ற) ஒன்றுக்கொன்று பொருந்துகின்ற விதத்தில் நிருவாகப் பிரதேசங்களை எல்லை நிர்ணயம் செய்தல் மற்றும் அடையாளப்படுத்தல் மிக விரைவாக கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவைப்பாடொன்றாகும்.

மேற்குறித்த விடயங்களை கவனத்தில் கொண்டு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் எல்லை நிர்ணயம் அடங்கலாக அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் விதத்தில் விரிவுபடுத்துவதற்கு நாம் பரிந்துரை செய்கின்றோம். அதன் மூலம் பின்வரும் பயன்கள் கிடைக்கப் பெறும்.

(1) எல்லை நிர்ணயம் மற்றும் எல்லை அடையாளப்படுத்தும் போது சீரான அடிப்படையில் பொருந்துகின்ற சமநிலை வழிமுறையொன்று ஏற்படல்.

(2) எல்லை நிர்ணயத்தின் போது பொதுவான தேசிய கொள்கையொன்றைப் பயன்படுத்த முடிதல்.

(3) அரசுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பொறுப்புக் கூறக்கூடிய நிறுவனமொன்று காணப்படல்.

(4) எல்லை நிர்ணய பணிகளுக்கான செலவுகளை கணிசமான விதத்தில் குறைத்துக் கொள்ள முடிதல்.

(5) எல்லை நிர்ணய அலுவல்கள் தொடர்பான தேர்ச்சி மற்றும் விசேட அறிவுடைய பயிற்சி பெற்ற பணிக்குழுவொன்று மூலம் அதிக வினைத்திறன் கொண்ட நிரந்தர நிறுவனக் கட்டமைப்பொன்று ஏற்படுத்தப்படல்.

(6) இவ்வாறான நிருவாகக் கட்டமைப்பின் மூலம் பிரதேச மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்கள் மற்றும் அரச நிருவாக அலகுகளுக்கிடையில் எல்லை நிர்ணயம் தொடர்பாக ஏற்படுகின்ற் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும்

இவ்விடயங்களை தங்களின் தயவன்பான கவனத்திற்கு கொண்டுவருவதற்கு விரும்புகின்றோம்.

தவிசாளர்
எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**இணைப்பு – 4**

**எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பாக அரசியல் அமைப்பு திருத்தின் போது அல்லது புதிய அரசியல் யாப்பொன்றை அறிமுகம் செய்யும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்.**

| **தற்போது காணப்படும் உறுப்புரை** | **உத்தேச உறுப்புரை** |
|---|---|
| 95<br><br>(1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்காக சனாதிபதி வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். அது சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதிபதி திருப்பதியுறுதல் வேண்டும். அத்தகைய ஆட்களுள் ஒருவரைச் சனாதிபதி தவிசாளராக நியமித்தல் வேண்டும்.<br><br>(2) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவருவரும் இறந்தால் அல்லது பதவிதுறந்தால், அல்லது அத்தகைய உறுப்பினரெவரும் அத்தகையவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகிவிட்டாரெனச் சனாதிபதி திருப்தியுற்றால், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சனாதிபதி அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும். | 95<br><br>(1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்காக சனாதிபதி வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். அது சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதிபதி திருப்பதியுறுதல் வேண்டும். அத்தகைய ஆட்களுள் ஒருவரைச் சனாதிபதி தவிசாளராக நியமித்தல் வேண்டும்.<br><br>(2) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவருவரும் இறந்தால் அல்லது பதவிதுறந்தால், அல்லது அத்தகைய உறுப்பினரெவரும் அத்தகையவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகிவிட்டாரெனச் சனாதிபதி திருப்தியுற்றால், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சனாதிபதி அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.<br><br>**95 ஆம் இலக்க உறுப்புரையின் பின்னர் கீழே காட்டப்பட்டுள்ள உறுப்புரைகள் உட்சேர்க்கப்பட வேண்டுமென்பதோடு அவை 95 அ , 95 ஆ , 95 இ , 95 ஈ , 95 உ , 95 ஊ , 95 எ , 95 ஏ உறுப்புரைகளாக செயல்வலுப் பெறச் செய்யப்படல் வேண்டும்.**<br><br>95 அ. ஆணைக்குழுவின் பணியாட்குழு :<br>ஆணைக்குழுவின் பணிகளை செவ்வனே ஆற்றிக் கொள்வதற்காக ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளின் கீழ் செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்படல் வேண்டும். |

| தற்போது காணப்படும் உறுப்புரை | உத்தேச உறுப்புரை |
| --- | --- |
| | 95 ஆ. ஆணைக்குழுவின் செலவுகள்:<br>ஆணைக்குழுவிற்கு திரட்டு நிதியத்தால் வரவு வைக்கப்படுகின்றவாறு வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும். ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்களுக்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட படிகள் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். அந்தப் படிகள் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டும்.<br><br>95 இ. ஆணைக்குழுவின் கூட்டங்கள்:<br>ஆணைக்குழுவின் அலுவல்களை ஆற்றிக்கொள்வதற்காக போதுமானவாறு பல தடவைகள் கூட்டங்கள் கூட்டப்படல் வேண்டும். ஆணைக்குழுவின் அனைத்துக் கூட்டங்களும் தவிசாளரின் தலைமையில் நடாத்தப்படல் வேண்டும். தவிசாளர் இல்லாத போது வேறு அங்கத்தவர் ஒருவர் தவிசாளராகச் செயற்படல் வேண்டும்.<br>95 ஈ. அங்கத்தவர்களிடையே பல கருத்துக்கள் நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் ஆக்கக் கூடுதலான அங்கத்தவர்களின் கருத்தை ஆணைக்குழுவின் கருத்தாகக் கருதுதல் வேண்டும். அங்கத்தவர்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள போது தவிசாளரின் கருத்தை ஆணைக்குழுவின் கருத்தாகக் கருதுதல் வேண்டும். |

| தற்போது காணப்படும் உறுப்புரை | உத்தேச உறுப்புரை |
|---|---|
| | 95 உ. தேசிய மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான பூகோள எல்லைகளை நிர்ணயம் செய்தல் அரசியல் அமைப்பு மற்றும் யாப்புத் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் அளவுகோல்களுக்கு இசைவாக ஆணைக்குழுவினால் தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும்.<br>95 ஊ. தேசிய சனத்தொகைக் கணக்கெடுப்பொன்று நிறைவடைந்து இரண்டு வருடங்களினுள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் சனத்தொகை உள்ளடக்கத்தின் மாற்றத்திற்கேற்ப தேர்தல் மாவட்டங்களின் பூகோள எல்லைகள் மீளாய்வு மற்றும் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறான மாற்றங்கள் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றதென்பதை மக்களை அறிவுறுத்தி வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்<br><br>95 **எ. மாகாண எல்லைகள் மற்றும் நிருவாக மாவட்ட எல்லைகளை நிர்ணயம் செய்தல்**<br><br>மாகாண எல்லைகள் மற்றும் நிருவாக மாவட்ட எல்லைகளை மாற்றம் செய்வதற்கு தேவைப்படுமிடத்து அமைச்சினால் பராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் அம் முன்மொழிவுகளை எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>95 ஏ. புதிய பிரதேச செயலகப் பிரிவுகள், புதிய கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகள் தற்போதுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகளின் திருத்தம், உள்ளூர் அதிகார |

| தற்போது காணப்படும் உறுப்புரை | உத்தேச உறுப்புரை |
|---|---|
| | சபைகளைப் புதிதாக தாபித்தல், உள்ளூர் அதிகார சபைகளை தரம் உயர்த்துதல் மற்றும் அவற்றின் எல்லைகளைத் திருத்தம் செய்தல், மாற்றம் செய்தல் ஆகிய விடயங்களை எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் ஊடாகச் செய்து கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்றின் மூலம் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும் |

| தற்போது காணப்படும் உறுப்புரை | உத்தேச உறுப்புரை |
|---|---|
| 96.<br>(1) வரையறை ஆணைக்குழு இலங்கையை இருபதுக்குக் குறையாததும் இருபத்தைந்துக்கு (25) மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து அவற்றிற்குப் பெயர்களைக் குறித்தொதுக்குதல் வேண்டும். | 96. புதிய தேர்தல் முறைமைக்கமையவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும். |
| (2) (2) இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றும் அதுவே ஒரு தேர்தல் மாவட்டமாக அமையலாம். அல்லது மாகாணம் ஒவ்வொன்றும் இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படலாம். | புதிய தேர்தல் முறைமைக்கமையவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும். |
| (3) மாகாணமொன்று பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படுமிடத்து, வரையறை ஆணைக்குழுவானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒரு நிருவாக மாவட்டமாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய நிருவாக மாவட்டங்களின் சேர்க்கையாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து நிருவாக மாவட்டமொன்றாக இருப்பதனை இயலக்கூடிய அளவுக்கு உறுதிப்படுத்தும் வண்ணம் அப்போதுள்ள நிருவாக மாவட்டங்களைக் கருத்துக்கெடுத்தல் வேண்டும். | புதிய தேர்தல் முறைமைக்கமைவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும். |

| தற்போது காணப்படும் உறுப்புரை | உத்தேச உறுப்புரை |
|---|---|
| (4) ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் மாவட்டங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நான்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவாதல் | |

| | |
|---|---|
| வேண்டும் : (இது அத்தகைய தேர்தல் மாவட்டங்களின் தேருநர் இடாப்பில் தம் பெயர்களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் எண்ணிக்கையைத் தொடர்புறுத்திப் பார்க்கும் போது எத்தனை உறுப்பினர்களை அம்மாவட்டங்கள் தெரிவுசெய்து அனுப்புவதற்கு உரித்துடையனவோ அத்தனை உறுப்பினர்களைவிடப் புறம்பானது) : வரையறை ஆணைக்குழுவானது அவ்வாறு ஒவ்வொன்றுக்கும் உரித்தாயுள்ள எண்ணிக்கையை அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் ஒப்புரவான முறையில் பங்குபோடல் வேண்டும்.<br><br>(5) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரிடையே அபிப்பிராய வேறுபாடு உள்ளவிடத்து, அவர்களில் பெரும்பான்மையினரின் அபிப்பிராயமே மேலோங்கி நிற்றல் வேண்டுமென்பதுடன், அதுவே ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வித்தியாசமான அபிப்பிராயத்தை உடையவராயிரக்குமிடத்து, தவிசாளரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிவெனக் கருதப்படுதல் வேண்டும். வேறுபடும் அபிப்பிராயங் கொண்ட உறுப்பினர் எவரும் அவ்வாறு வேறுபடுவதற்குத் தமக்குள்ள காரணங்களைக் கூறலாம்.<br><br>(6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் முடிவுகளை, வேறுபடும் அபிப்பிராயங்களைக் கொண்ட உறுப்பினரால் கூறப்பட்ட காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றோடு சேர்த்து சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். | புதிய தேர்தல் முறைமைக்கமைவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும்.<br><br>((5) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரிடையே அபிப்பிராய வேறுபாடு உள்ளவிடத்து, அவர்களில் பெரும்பான்மையினரின் அபிப்பிராயமே மேலோங்கி நிற்றல் வேண்டுமென்பதுடன், அதுவே ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வித்தியாசமான அபிப்ராயத்தை உடையவராயிருக்குமிடத்து, தவிசாளரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிவெனக் கருதப்படுதல் வேண்டும். வேறுபடும் அபிப்ராயங் கொண்ட உறுப்பினர் எவரும் அவ்வாறு வேறுபடுவதற்குத் தமக்குள்ள காரணங்களைக் கூறலாம்.<br><br>(6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் முடிவுகளை, வேறுபடும் அபிப்பிராயங்களைக் கொண்ட உறுப்பினரால் கூறப்பட்ட காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றோடு சேர்த்து சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். |

| **தற்போது காணப்படும் உறுப்புரை** | **உத்தேச உறுப்புரை** |
|---|---|
| 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் 62 (l) உறுப்புரை<br>அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய தாபிக்கப்பட்ட ஒவ்வொரு தேர்தல்கள் மாவட்டங்களின் வாக்காளர்களால் தேர்தெடுக்கப்படுகின்ற நூற்றுத்தொன்னூற்றாறு உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றமொன்று இருத்தல் வேண்டும். | புதிய தேர்தல் முறைமைக்கமைவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| **1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பின் பதினான்காம் திருத்தத்தின் 62 உறுப்புரை (3) ஆம் வாசகத்தால் திருத்தம் செய்யப்படல்**<br>அரசியல் அமைப்பின் 62 ஆம் உறுப்புரை அதன் (i) ஆம் உறுப்புரை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இங்கு கீழே காட்டப்பட்டுள்ள உப உறுப்புரை மாற்றீடு செய்யப்பட்டுத் திருத்தம் செய்யப்படுகின்றது.<br>(I) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய தேர்தெடுக்கப்பட்ட இருநூற்றிருபத்ததைந்து உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றமொன்று இருத்தல் வேண்டும்".<br>(225 உறுப்பினர்களில் 196 உறுப்பினர்கள் 22 தேர்தல்கள் மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். எஞ்சிய 29 உறுப்பினர்கள் தேசிய மட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு அமைவாக கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களிலிருந்து தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.) | புதிய தேர்தல் முறைமைக்கமைவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும். |

| **தற்போது காணப்படும் உறுப்புரை** | **உத்தேச உறுப்புரை** |
|---|---|
| **1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் பதினான்காம் திருத்தம் அரசியல் யாப்பின் 96 அ உறுப்புரை 5 ஆம் திருத்தம் .**<br>96 அ தேர்தல் மாவட்டங்களை வலயங்களாகப் பிரித்தல்<br>(1) இவ்வுறுப்புரை வலுவுக்கு வந்ததிலிருந்து இரண்டு வாரங்களினுள் சனாதிபதி பத்து உறுப்பினர்களுக்கு மேற்பட்டோரைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துள்ள தேர்தல் மாவட்டங்களை அவசியமானவிடத்து வலயங்களாப் பிரிக்கும் நோக்கத்துக்காக அரசியலில் முனைப்பாக ஈடுபட்டிராதவர்களென அவர் திருப்திப்படுவோரும், அவரால் நியமிக்கப்பட்டோருமான மூன்று ஆட்களைக் கொண்ட வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். சனாதிபதி அத்தகைய ஆட்களுள் ஒருவரைத் | 95 ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| தவிசாளராகவிருக்கவென நியமித்தல் வேண்டும்.<br>(2) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவரும் இறந்தால் அல்லது பதவி நீங்கினால் அல்லது அத்தகைய எவரேனும் உறுப்பினர் அத்தகையவராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக வந்துள்ளாரென சனாதிபதி திருப்திப்பட்டால் , சனாதிபதி இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்திக்கிணங்க அவரின் இடத்தில் இன்னோருவரை நியமித்தல் வேண்டும். | 95 ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது |
| **தற்போது காணப்படும் உறுப்புரை** | **உத்தேச உறுப்புரை** |
| (3) பத்து உறுப்பினர்களுக்கு மேற்பட்டோரைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் இன,மத அல்லது அத்தகைய வேறு ஒத்த அக்கறையான பொது அக்கறையொன்றினால் ஒன்று கூட்டப்பட்ட, ஆனால் அந்தத் தேர்தல் மாவட்டத்திலுள்ள தேருநர்களில் பெரும்பான்மையினரிலிருந்து ஓர் அம்சத்திலோ அல்லது அதற்கதிகமான அம்சங்களிலோ வித்தியாசப்படுகின்ற ஆட்கள் பெருமளவில் வெறிந்திருக்கின்றனரென வரையறை ஆணைக்குழுவுக்குத் தோன்றுமிடத்து வரையறை ஆணைக்குழு முறையீடுகளைச் செய்வதற்குப் பொது மக்களுக்குச் சந்தர்ப்பம் ஒன்றை அளித்த பின்னர் அந்த அக்கறை பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை இயன்றரை உறுதிப்படுத்துமுகமாக அந்தந்த தேர்தல் மாவட்டத்ததை வலயங்களாகப் பிரிக்கலாம். எவ்வாறாயினும் பத்துக்கு மேற்பட்ட ஆனால் இருபதுக்குக் குறைந்த உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துள்ள தேர்தல் மாவட்டமொன்று இரண்டுக்கு மேற்படாத வலயங்களாகப்பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இருபது உறுப்பினர்களுக்கு மேற்பட்டோரைத் தெரிந்தனுப்புதற்கு உரித்துள்ள தேர்தல் மாவட்டமொன்று மூன்றுக்கு மேற்படாத வலயங்களாப்பிரிக்கப்படுதலும் வேண்டும். | நீக்கம் செய்யப்படும் |

| தற்போது காணப்படும் உறுப்புரை | உத்தேச உறுப்புரை |
| --- | --- |
| (4) ஒரு தேர்தல் மாவட்டத்தை வலயங்களாகப் பிரிக்கையில் வரையறை ஆணைக்குழு, தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்திற் கீழ் அந்தந்த தேர்தல் மாவட்டம் எவ்வாக்கெடுப்புப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதோ, அவ்வாக்கெடுப்புப் பிரிவுகளை, ஒவ்வொரு வலயமும் அத்தயை வாக்கெடுப்புப் பிரிவுகளுள் இரண்டின் அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் சேர்க்கையாகவிருப்பதனைச் சாத்தியமாகக் கூடியவரை உறுதிப்படுத்துமுகமாகக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். | நீக்கம் செய்யப்படும் |
| (5) உறுப்புரை 96 இன் (5) ஆம், (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் வரையறை ஆணைக்குழுவின் முடிவுகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். | நீக்கம் செய்யப்படும் |
| (6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளர் இவ்வுறுப்புரை வலுவுக்கு வந்ததிலிருந்து இரண்டு மாதங்களினுள் , தேர்தல் மாவட்டங்களை வலயங்களாகப் பிரித்தல் பற்றிய ஆணைக்குழுவின் முடிவுகளைச் சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். . | நீக்கம் செய்யப்படும் |
| (7) சனாதிபதி பிரகடனத்தின் மூலம், வரையறை ஆணைக்குழுவின் முடிபுகளுக்கிணங்க தேர்தல் மாவட்டமொன்று எந்த வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோ அந்த வலயங்களின் பெயர்களையும் எல்லைகளையும் வெளியிடுதல் வேண்டும். பிரகடனத்திற் குறித்துரைக்கப்பட்ட வலயங்கள் அடுத்து வரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தலில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், அரசியலமைப்பினதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தினதும் நோக்கங்களுக்காக, அந்தந்த தேர்தல் மாவட்டத்தின் வலயங்களாகவிருத்தலும் | |

| வேண்டும். | |
|---|---|
| **தற்போது காணப்படும் உறுப்புரை** | **உத்தேச உறுப்புரை** |
| **1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் பதினைந்தாம் திருத்தம்**<br><br>இலங்கை அரசியல் யாப்பின் பதினைந்தாம் திருத்தத்தின் மூலம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்கான தீர்மானிக்கும் தொகை 1/8 (12.5 %) இருந்து 1/20 (5%) வரை குறைக்கப்பட்டது. தேர்தல் வலயங்கள் என்பது நீக்கப்பட்டு தேர்தல் மாவட்டம் என்ற சொல் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திருத்தம் 1988 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>இச்சட்டம் அரசியலமைப்பின் 15 ஆம் திருத்தமென அழைக்கப்படும்<br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 96 அ உறுப்புரை ( இதன் பின்னர் உறுப்புரை என அழைக்கப்படும்) இதன் மூலம் நீக்கம் செய்யப்படும். | நீக்கம் செய்யப்படும்<br><br>புதிய தேர்தல் முறைமைக்கமையவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும். |

**இணைப்பு -5**

2016 ஒக்தோபர் 06

கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள்,

பிரதமர் மற்றும் தவிசாளர்,

அரசியலமைப்பு பேரவை வழிநடத்தல் குழு,

பிரதமர் அலுவலகம்

58,

சேர் ஆர்னஸ்ட் த சில்வா மாவத்தை,

கொழும்பு 07.

கௌரவ பிரதமர் அவர்களுக்கு,

**<u>இலங்கையின் எல்லை நிர்ணயம் தொடர்பான கோட்பாடு மற்றும் அடிப்படைய உள்ளடக்கம்</u>**

**புதிய அரசியலமைப்பு வரைவுபடுப்பத்தப்படும் போது அரசியலமைப்புப் பேரவையின் வழிநடாத்தல் குழுவினால் கவனத்தில் கொள்வதற்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டது.**

தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு அரசியலமைப்பில் 41ஆ மற்றும் 95(1) உறுப்புரையின் கீழ் 2015 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. ஆணைக்குழு அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட தவிசாளர் கலாநிதி கே. தவலிங்கம் மற்றும் அங்கத்தவர் கலாநிதி. அனிலா டயஸ் பண்டாரநாயக்க மற்றும் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லா ஆகியோரை உள்ளடக்கியது.

அரசியலமைப்பினால் 9 சுயாதீன ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டதோடு, அவற்றின் பணிப் பொறுப்புக்கள் அந்தந்த உறுப்புரைகளால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு ஏற்புடையாவதோடு, அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு மூன்று மாதங்களினுள் தாபிக்கப்பட வேண்டிய அவ்வாணைக்குழுவுக்காக குறிப்பிட்ட பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்படும். தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு மேற்குறித்த காலப்பகுதியினுள் நியமனம் செய்யப்பட்ட ஒன்றல்ல என்பதால் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகள் இதற்கு எவ்வாறு ஏற்புடையதாகுமென்பது தெளிவாக தெரியவில்லை. ஏனைய பெரும்பாலான ஆணைக்குழுக்கள் போன்றில்லாமல் இவ்வாணைக்குழுவுக்குக் கையளிக்கப்படுகின்ற தத்துவம் மற்றும் பணிகள் தெளிவுபடுத்தப்படவில்லை. இது தொடர்பில் அரசியலமைப்புத் திருத்தமொன்று அல்லது புதிய அரசியலமைப்பொன்று நிறைவேற்றப்படல் வேண்டுமென்பதால். இவ்விடயம் 2015 நவம்பர் 23 ஆம் திகதி அரசியலமைப்புப் பேரவையுடன் கலந்துரையாடப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் தத்துவங்கள் தொடர்பான முன்மொழிவுகள் அரச சேவைகள் உப குழுவின் செயலாளருக்கும் அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளருக்கும் 2016 யூலை மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

இதற்கு மேலதிகமாக தற்போது தயாரிக்கப்பட்ட வண்ணமுள்ள புதிய அரசியலமைப்புக்கு அனைத்து மட்டங்களதும் தரப்புக்களின் கருத்துக்கள் ஒழுங்கு முறையாக சேகரிக்கப்பட்டு தயாரிக்கப்படுவதாக எமக்கு அறிய முடிகிறது. ஆதலால், இவ்வாணைக்குழு தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் நாம் நடாத்திய கலந்துரையாடல்களில் எல்லை நிர்ணயம் தொடர்பாக எழுந்த விடயங்களில் உத்தேச அரசியலமைப்பைத் தயாரிக்கும் போது பயனுள்ளதாக அமையுமென நாம் கருதுகின்ற சமகால அரசியல் பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் மற்றும் அது தொடர்பான எமது கருத்துக்களை

உங்கள் வழிநடத்தல் குழு கவனத்தில் கொள்ளதக்கவாறு இத்தோடு, சமர்ப்பிக்க விரும்புகின்றோம். இணைக்கப்பட்டுள்ள குறிப்பு அதற்காக உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நீங்கள் மற்றும் வழிநடத்தல் குழுவின் நீங்கள் பெயர் குறிக்கின்ற ஏனைய அங்கத்தவர்களை உங்களுக்கு வசதியான சந்தர்ப்பமொன்றில் சந்திப்பதற்கு எமக்கு சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்தி தருவீர்களாயின், பொருத்தமாகும்.

இப்படிக்கு,

உண்மையுள்ள,

கே. தவலிங்கம்,
தவிசாளர்,
எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள்,**

பிரதமர் மற்றும் தவிசாளர் - இலங்கை அரசியலமைப்பு வழிநடாத்தல் குழுவிற்கு,

**கலாநிதி கலாநிதி. கே. தவலிங்கம்,** தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழுவிடமிருந்து,

2016 ஒக்தோபர் 04

**<u>இலங்கையின் எல்லை நிர்ணயத்திற்கான கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு</u>**

புதிய இலங்கையின் அரசியலமைப்பொன்றை வரையும் போது கருத்திற் கொள்வதற்காக 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு அரசியலமைப்புப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணம்

01. அறிமுகம்

இலங்கை முக்கியமான ஓரிடத்திற்கு வருகைதந்துள்ளது. தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்ற அரசியலமைப்பின் மூலம் இலங்கையில் சமாதானம், உறுதிப்பாடு மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி இட்டு செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையினுள் ஏற்படுத்தப்படுகின்ற நேர்கணிய மாற்றங்கள் இவ்வரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மேலும் துரிதப்படுத்தப்படுமென புதிதாக நியமனம் செய்யப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்களாகிய எமது நம்பிக்கையாகும். அதனை உண்மைப்படுத்திக் கொள்வதற்கு முயற்சியொன்றை செய்ய வேண்டுமென்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எல்லை நிர்ணயம் தொடர்பான அனைத்து விடயங்களும் இப்புதிய அரசியலமப்பில் தீர்க்கப்படுமென நாங்கள் கருதுகின்றோம்.

நாம் அறிந்த வரையில் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்ற அரசியலமைப்பு நாட்டின் அனைத்து மட்ட தரப்புக்களதும் கருத்துக்களை முறையாக விசாரித்து தயாரிக்கப்படுகின்றதொன்றாகும். கடந்த நவம்பர் மாதம் நாம் நியமனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து எல்லை நிருணயம் தொடர்பான கோட்பாடுகள் முக்கிய விடயங்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை இவ்வாறு பகிர்ந்து கொள்வதற்கு நாம் விரும்புகின்றோம். அந்த கருத்துக்களை உத்தேச அரசியலமைப்பில் உட்சேர்ப்பது பொருத்தமென நாம் கருதுகின்றோம். அதற்காக இந்த சிறிய குறிப்பை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். இந்த ஆவணம் முன்னைய எல்லை நிர்ணய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளையும், குறித்த விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்களையும் வேறு நாடுகளிலிருந்து பெற முடிந்த அனுபவங்களையும் எமது அறிவு மற்றும் ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரித்துள்ளோம்.

**02. தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால நோக்கு**

1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பில் காட்டப்பட்டுள்ளவாறு அரசியலமைப்புக்களினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு சனத்தொகை மற்றும் காணியின் அளவை அடிப்படையாகக் கொண்ட தெளிவான பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பிலும் மற்றும் அதனோடு சேர்க்கப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்களினாலும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நியமனம் செய்தல் மற்றும் அவற்றுக்கான பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக தெளிவான குறிப்பொன்று காணப்படவில்லை.

மேலும், உள்ளூரதிகார சபை தேர்தல் வட்டார எல்லை நிர்ணயம் வேறு சட்டங்களின் கீழ் எல்லை நிர்ணய குழுவுக்கு கையளிக்கப்பட்டிருந்ததோடு, அதில் எல்லை நிர்ணயம் தொடர்பான விடயம், அதற்கான காரணங்கள், பணிப்பொறுப்புக்கள் தொடர்பான பொறுப்பு தொடர்பில் சிக்கலொன்று தோன்றியது. இதன் காரணமாக சனத்தொகை போக்கு காணியின் அளவு மற்றும் தேர்தல் மாவட்டங்கள் தொடர்பான வேறு விடயங்கள் மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பான தர்க்க ரீதியான அடிப்படையொன்றை மீள ஏற்படுத்துவதற்கான கோட்பாட்டு முறைமையொன்று மற்றும் அடிப்படை கட்டமைப்பொன்றும் தேவையாகும். இங்கு தேசிய, மாகாண மற்றும் உள்ளூரதிகார என்ற அனைத்து

மட்டங்களுக்குமான கோட்பாடுகள் மற்றும் அடிப்படை கட்டமைப்புக்களை தோற்றுவிப்பது பொருத்தமாகும்.

இதனிடையே இலங்கையின் தேர்தல் மாவட்டங்கள் (தேசிய, மாகாண, உள்ளூராட்சி) எல்லைகளையும் நிருவாக ரீதியான (மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு) எல்லைகளையும் அரச சேவைகளுக்கான (சுகாதார, கல்வி மற்றும் பாதுகாப்பு சேவைகள்) தொடர்பான எல்லைகளுக்கிடையில் பூகோள ஒற்றுமை அல்லது பொருத்தம் இல்லையென்பதோடு, அவற்றை ஏற்படுத்துவதற்கு முக்கியத்துவம் வழங்கப்படவுமில்லை. இதன் காரணமாக வளங்கள் சீராக பகிர்ந்தளிக்கப்படவில்லையென்பதோடு, நாட்டினுள் தேர்தல் பிரதிநிதித்துவம், நிருவாகம் மற்றும் சேவை வழங்கல் தொடர்பில் வினைத்திறனின்மை காணப்படுகின்றது. தேசிய மட்டத்தில் இவ்விடைவெளியை நிரப்புவதற்கான அரிய சந்தர்ப்பமொன்று தற்போது கிட்டியுள்ளது.

03. நீண்டகால நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகள்

வரையறுக்கப்பட்ட நிலப் பிரதேசமொன்றினுள் எவரேனும் வேட்பாளரொருவருக்காக வாக்களிப்பதற்கான நோக்கமாகயிருக்க வேண்டியது பின்வரும் விடயங்கள் தொடர்பிலான பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்காகவாகும்.

3.1. மக்களின் பாதுகாப்பு – மக்களின் சுகவாழ்வு (பௌதீக, ஆன்மீக மற்றும் கருணை விடயங்கள்) விருத்தி செய்தல்.

- பௌதீக ,உணவு, ஆடையணிகலன், வீடு, பொது வசதிகள், சுகாதார வசதி, போக்குவரத்து மற்றும் தொடர்பாடலுக்கான பிரவேசம்
- ஆன்மீகம் - கல்வி தொழிலீடுபடுதல், கலாச்சாரம் தொடர்பான பிரவேசம்
- கருணை, சிந்திக்கும், கருத்து தெரிவிக்கும் சுதந்திரம், தனியாள் பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு, சமய வழிபாட்டு தலங்களினுள் பிரவேசித்தல், பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு

3.2. காணியின் பாதுகாப்பு – அதன் வளங்களைப் பாதுகாத்தல் (நிலம், நீர், காற்று)

- நிலம் - தாவரங்கள் மற்றும் உயிரினங்கள், கனிப்பொருட்கள் நில வளங்களைப் பாதுகாத்தல்.
- நீர் - நண்ணீர் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாத்தல்.
- காற்று – வாயுக் கோளம் மழைவீழ்ச்சி, ஓசோன்படலம் என்பவற்றைப் பாதுகாத்தல்.
-

3.3. இனவகை – சமயம், குலம், ஆண் பெண் பால் நிலை, சமூக நிலை, அரசியல் கருத்துக்கள் அல்லது வேறு அது போன்ற வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாது மக்கள் சுகவாழ்வை அடைந்து கொள்வதற்கு பிரசைகளுக்கு சமமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

பிரசைகளுக்கு தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான தேவையான தேர்தல் மாவட்டங்களை நிர்ணயித்துக் கொள்வதற்கான அடிப்படைக் கட்டமைப்பு

1. பிரசைகளின் சுகவாழ்வு

2 நிலையான சூழல்

3. சமமான பிரவேசம்

ஆகிய மூன்று அடிப்படை கோட்பாடுகளின் மீது அமைதல் வேண்டும்.

குறுகிய கால விடயங்களை ஆராய்ந்து பார்த்தல், இன்று நாட்டில் நிலவுகின்ற அரசியல் மற்றும் சமூக பின்னணி தொடர்பான நாம் அறிவோம். அதே போன்று கடந்த காலத்தில் காணப்பட்ட எண்ணங்களில் மாற்றத்தை ஏற்படுத்த நேரிடுமாயின், அதனை நுணக்கமான அடிப்படையில் கட்டம் கட்டமாக மேற்கொள்ளல் வேண்டும். சுதந்திரம் கிடைத்த

தினத்திலிருந்து ஒவ்வொரு காலப்பகுதிகளில் விஷேடமாக கடந்த முப்பது வருட காலத்தினுள் இடம் பெற்ற சிவில் போராட்டம் காரணமாக அனுபவிக்க நேரிட்ட வெறுப்பான சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கின்ற போது இன மற்றும் சமய சிறு இனப் பிரிவுகளிடையே தமக்கு அருகிலுள்ள அச்சம் மற்றும் பாதுகாப்பற்ற தன்மையிலிருந்து விடுபட முடியாதென்பது தெரிகின்றது. மேலே குறிப்பிட்ட நீண்டகால நிலையான கோட்பாடுகள் எல்லை நிர்ணயத்தை நியாயமாக பயன்படுத்தினால் இக்குறுகிய கால சிக்கலுக்கு தீர்வொன்றை அதன் மூலம் அடைந்து கொள்ள முடியும். இலங்கையின் அடையாளத்தை கட்டியெழுப்பக் கூடிய சிறந்த சந்தர்ப்பமாக இது அமையும்.

4. சிறப்பான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட எல்லை நிர்ணயம் தொடர்பான அமைப்பு

4.1 கருத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்

- தற்போதுள்ள நிருவாக எல்லைகள், சேவை வழங்கும் எல்லைகள் மற்றும் தேர்தல்கள் மாவட்டங்கள்
- இன உள்ளடக்கம், சனத்தொகை மற்றும் வீடுகளின் தொகை
- நிலப்பகுதி, பூகோள இலட்சனங்கள் மற்றும் நிலம் தொடர்பான விசேட இலட்சணங்கள்.
- வீடுகள், பொது வசதிகள், சுகாதார வசதிகள் மற்றும் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் வழிகளுக்கான பிரவேசம்.
- கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள்
- பொலீஸ் மற்றும் சமயத்தலங்களுக்குள் கலாச்சார அலுவல்கள் மற்றும் விளையாட்டு அலுவல்களுக்காக பிரவேசிப்பதற்கான சாத்தியப்பாடு.
- தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் தோன்றக் கூடிய வளங்களின் அளவு மற்றம் எதிர்கால பொருளாதார விருத்தி தொடர்பான எதிர்பார்ப்புக்கள்.

**4.1. எல்லை நிர்ணயம் தொடர்பாக 20 ஆம் அரசியல் யாப்புத் திருத்த வரைவில் காணப்படும் குறைபாடுகள்.**

இனக்காரணி தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென இருபதாம் அரசியல் யாப்புத் திருத்த வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பான 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்போது நாட்டில் காணப்பட்ட நிலைமையைக் கருத்திற் கொண்டு அது அவ்வாறு வலியுறுத்தப்பட்டிருக்கக் கூடும்.

உதாரணம் : 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 3 ஆ 2 (அ) பிரிவு மற்றும் இருபதாம் அரசியல் யாப்புத் திருத்த வரைவில் 96 அ 2 (அ) 2 ………….கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்படும்…………….

(அ) குறித்த பிரதேசத்தின் சனத்தொகையின் இன உள்ளடக்கத்தின் விகிதாசாரத்திற்குப் பொருத்தமான பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்காக…………

உத்தேச அரசியல் யாப்பில் இன உள்ளடக்கத்தை மாத்திரம் கருத்திற் கொள்ளும் போது அதனால் பிரிவு ஏற்படுவது மாத்திரமின்றி அந்த துணை சனத்தொகையினுள் உள்ள சமய இலட்சணங்கள் ,குலக்காரணிகள் என்பன கருத்திற் கொள்ளப்படாமல் விடப்படும். இவ்விடயம் மீள ஆராயப்பட்டு ஆழமாக கலந்துரையாடி சிறந்த தீர்வொன்றை எட்டுதல் வேண்டும். அதன் மூலம் வேறு பிரிக்காமல் அனைவரையும் ஒன்றிணைக்கும் தீர்வுக்குச் செல்ல வேண்டும். அது "இலங்கையர்" என்ற ஆளடையாளம் கொண்ட கலாச்சாரத்தை தோற்றுவிப்பதற்கும ''அவர்களுக்கு" பதிலாக "நாங்கள்" என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமையும். பிரிவு (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகிய பிரிவுகளுக்கு சமமாகும் மேலே. 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் ஊடாக மற்றும் 3 ஆ (2) மற்றும் 96 அ(2) பிரிவுகளால் பிரிவனை ஏற்படமாட்டாது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

### ஏனைய நடைமுறைக் காரணிகள்

மேற்படி 2 ஆம் பந்தியின் பிரகாரம் தற்போது காணப்படுகின்ற (அ) தேர்தல் மாவட்டங்களின் எல்லைகள் (தேசிய, மாகாண, உள்ளூராட்சி) (ஆ) நிருவாக எல்லைகள் (மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு) மற்றும் (இ) சேவை வழங்கும் எல்லைகள் (சுகாதாரம், கல்வி ,நீதிமன்றம், பொலீஸ், விவசாயக் கருத்திட்டங்கள் என்பன) ஒன்றுக்கொன்று பொருத்தப்பாடு அல்லது சமனான தன்மை இல்லையென்பதோடு, சுருக்கமாகக் கூறுவதாயின் இவ்வனைத்து எல்லைகளும் பிரிக்கப்பட்டிருப்பது பொதுமக்களுக்கு மேலே 4 ஆம் பந்தியின் உள்ளடக்க நோக்கங்களை(அ) தேர்தல் பிரதிநிதித்துவம் (ஆ) பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகம் (இ) பன்முகப்படுத்தப்பட்ட சேவை வழங்கல் ஆகிய பணிகளை ஆற்றிக் கொள்வதற்றகாகவாகும். இதன் காரணமாக எல்லை நிர்ணம் தொடர்பான விடயத்தில் இவ்வணைத்து எல்லைகளுக்கும் ஒரே விதமான கோட்பாட்டு முறைமை மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு என்பவற்றை பின்பற்றுதல் வேண்டும்.

### 4.1 . தற்போதைய உண்மை நிலை – தற்போதைய சனத்தொகை மற்றும் நிலப் பாங்கு/நில மாதிரி

மேலே அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு சனத்தொகை மற்றும் நிலத்தின் இலட்சணத்திற்கமைய இலங்கையின் ஒன்பது மாகாணங்களும் பின்வரும் மூன்று தொகுதிகளினுள் உள்ளடங்கும்.

நாட்டின் தலைநகரம் நிருவாக கோந்திர நிலையமொன்றாகவும், வியாபார மற்றும் வர்த்தக நிலையமொன்றாகவும், பிரதான விமான நிலையம் மற்றும் துறைமுகம் அமையப்பெற்றுள்ள மேல் மாகாணம் 5 மில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்டுள்ள ஒரேயொரு மாகாணமாகும். மிகக்குறைந்த நில அளவான 4000 சதுர கிலோமீற்றர் அதற்குள் அடங்குவதோடு சதுர கிலோமீற்றர் ஒன்றுக்கு 310 என்ற நாட்டின் சாதாரன சனத்தொகை அடர்த்தியை விட 5 மடங்கு அதில் உள்ளடங்கியுள்ளது.

பொருளாதார அலுவல்கள் தொடர்பான கோந்திர நிலையமான இம்மாகாணத்திற்கு அருகில் உள்ள மத்திய, தெற்கு, வட மேற்கு, சப்பிரகமுவ ஆகிய 4 மாகாணங்கள் உப

தொகுதிக்குள் அடங்கும். அவற்றின் 1.9 மற்றும் 2.6 மில்லியன்களுக்கு இடைப்பட்டதாகும். நில அளவு சதுர கிலோமீற்றருக்கு 4,900 தொடக்கம் 8,000 இற்க இடைப்பட்டதாகும். இவற்றின் சன அடர்த்தி சாதாரண சன அடர்த்திக்கு அண்மித்தாகும்.

பொருளாதார கேந்திர நிலையத்திற்கு தூரத்தில் அமையப் பெற்றுள்ள 4 மாகாணங்களான கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் வடக்கு ஆகிய மாகாணங்கள் நில அளவில் பெரியதாகும். இருப்பினும் மனித வளங்கள் அடிப்படையில் குறைவானதாகும். சனத்தொகை 1.0 தொடக்கம் 1.6 இற்கு இடையில் அடங்கும். நில அளவு சதுரக் கிலோமீற்றருக்கு 8,500 தொடக்கம் 10,500 வரையாகும். இதன் காரணமாக மூன்றாம் உப தொகுதியில் உள்ளடங்குவதோடு சன அடர்த்தி சாதாரண சன அடர்த்தியை விட அரைவாசிக்கு கிட்டியதாகும்.

இந்த தொகுதி மாதிரியில் மாற்றமொன்று எதிர்வரும் பல வருடங்களினுள் காணமுடியாது. ஆதலால் தேர்தல்கள் மாவட்டமொன்றின் சனத்தொகை மற்றும் காணியின் அளவுக்கு அமைய தேர்தல்கள் முகாமைத்துவம் வழங்குகின்ற போது 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கோட்பாடுகளுக்கு இசைவாக மேற்குறித்த 4.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள (அ) (ஆ) (இ) ஆகிய எல்லலை நிர்ணய பிரிவுகளில் காணப்படும் விசேட இலட்சணங்கள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். அந்த உப தொகுதிகள் மூன்றையும் விசேட பரிவுகளாக இம் மூன்றையும் கொள்ளும் போது எல்லை நிர்ணயத்தின் போது மிகவும் தெளிவான அளவு கோல்களை (நியதிகளை) தயாரிக்க முடியுமென்பதோடு தேர்தல்கள் பிரதிநிதித்துவத்தை மிகவும் தர்க்க ரீதியாக உபயோகப்படுத்திக் கொள்வதற்கும் முடியும். இந்த 3.3 இல் காட்டப்பட்டுள்ள கோட்பாடுகளின் உள்ளடக்கம் சிறு இனக்குழுக்களிற்கு முழு பிரதிநிதித்துவம் அல்லது குறைந்த பிரதிநிதித்துவம் கிடைக்குமென ஏற்படக் கூடிய சந்தேகம் மற்றும் அச்சம் என்பவற்றை இதன் மூலம் அகற்றிக் கொள்வதற்கும் முடியும்.

**அட்டவணை 1. தற்போதைய சனத்தொகையும் மற்றும் காணியின் இயல்பும்**

| மாகாணம் | தொகுதி | சனத்தொகை | வீடுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு ( ச.கி.மீ) | சனத்தொகை/ காணியின் அளவு | வீடுகளின் எண்ணிக்கை / காணியின் அளவு / | காணியின் அளவு ( சதுர கிலோ மீற்றருக்கு) சனத்தொகையின் சதவீதம் | காணியின் அளவு ( சதுர கிலோ மீற்றருக்கு) வீடுகளின் எண்ணிக்கை சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 1 | 5,851,130 | 1,482,221 | 3,684 | 1,588 | 402 | 13.3 | 13.8 |
| மத்திய | 2 | 2,571,557 | 658,911 | 5,674 | 453 | 116 | 3.8 | 4.0 |
| தென் | 2 | 2,477,285 | 636,406 | 5,544 | 447 | 115 | 3.7 | 3.9 |
| மேல் | 2 | 2,380,861 | 646,145 | 7,888 | 302 | 82 | 2.5 | 2.8 |
| சப்பிரகமுவ | 2 | 1,928,655 | 506,642 | 4,968 | 388 | 102 | 3.2 | 3.5 |
| கிழக்கு | 3 | 1,555,510 | 397,083 | 9,996 | 156 | 40 | 1.3 | 1.4 |
| வடமத்திய | 3 | 1,266,663 | 342,366 | 10,472 | 121 | 33 | 1.0 | 1.1 |
| ஊவா | 3 | 1,266,463 | 335,037 | 8,500 | 149 | 39 | 1.2 | 1.3 |
| வடக்கு | 3 | 1,061,315 | 259,471 | 8,884 | 119 | 29 | 1.0 | 1.0 |
| **மொத்தம்** | | **20,359,439** | **5,264,282** | **65,610** | **310** | **80** | **2.6** | **2.7** |

| | |
|---|---|
| 1 தொகுதி | **சனத்தொகை >மில்லியன் 5 , காணியின் அளவு <4,000 ச.கி.மீ : சனத்தொகை / காணியின் அளவு >1,500, வீடுகளின் எண்ணிக்கை / காணியின் அளவு >400** |
| 2 தொகுதி | **மில்லியன் 1.9 < சனத்தொகை < மில்லியன் 2.6, 4,900< காணியின் அளவு <8,000; 300< சனத்தொகை / காணியின் அளவு <500 , 80< வீடுகளின் எண்ணிக்கை / காணியின் அளவு <120** |
| 3 தொகுதி | **மில்லியன் 1.0 < சனத்தொகை < மில்லியன் 1.6, 8,500< காணியின் அளவு <10,500; 100< சனத்தொகை / காணியின் அளவு <160, 25< வீடுகளின் எண்ணிக்கை / காணியின் அளவு <40** |

நாம் குறிப்பிட்டுள்ளவாறு நாடு எதிர்காலத்தில் மிகவும் நிலையான மற்றும் பாதுகாப்பான எதிர்காலமொன்றை அடைந்து கொள்ள வேண்டுமெனில் எல்லை நிர்ணம் செய்யும் போது அறிவுபூர்வமாகவும், பிரிவினைகளுக்கு உட்படாத அடிப்படையில் இருந்து செயற்படுதல் வேண்டும். தேர்தல்கள் எல்லை நிர்ணயத்தின் போது மாத்திரமின்றி அரசியல், நிருவாகம் மற்றும் பூகோள எல்லைகளை நிர்ணயம் செய்யும் போதும் இவற்றைப் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 5. பரிந்துரைகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஊடாக புதிய அரசியல் யாப்பில் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவது காலத்திற்குப் பொருத்தமானதென சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

5.1 மேலே 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கோட்பாடுகள்,

5.2 ஒன்பது மாகாணங்களின் நில அளவு மற்றும் சனத்தொகைப் பரம்பலை ஆராயும் போது 1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள உப தொகுதிகள் தொடர்பான எண்ணக் கருவை பயன்படுத்திக் கொள்ளல்

5.3 தேர்தல் மாவட்டங்கள், நிருவாகப் பிரதேசங்கள் மற்றும் சேவை வழங்கும் பிரதேசங்கள் என மேலே 4.3 இல் காட்டப்பட்டுள்ள(அ), (ஆ), (இ) ஆகிய பூகோள எல்லைகளை மூன்று பிரிவாகக் கொண்டு எல்லை நிர்ணய எண்ணக் கருவை விருத்தி செய்தல் மற்றும்,

5.4 இந்த பொறுப்புக்கள் மற்றும் பணிகளை விளைதிறன் மிக்கதாக ஆற்றிக் கொள்வதற்கு ஒரே எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குக் கையளித்தல்.

எல்லை நிர்ணம் தொடர்பான கோட்பாடு மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு தொடர்பில் உங்கள் வழிநடத்தல் குழு கொண்டுள்ள கருத்துக்கள் தொடர்பாகவும் உத்தேச அரசியல் யாப்பினுள் எல்லை நிர்ணயம் தொடர்பாக மேற்குறித்த பரிந்துரைகள் தொடர்பாகவும் உங்களுக்கு வசதியான சந்தர்ப்பமொன்றில் கூடிய விரைவில் உங்களையும் மற்றும் உங்கள் வழிநடத்தல் குழுவின் நீங்கள் பெயர் குறிக்கின்ற அங்கத்தவர்களையும் சந்தித்து கலந்துரையாடுவதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்கள் விருப்பத்தோடு உள்ளார்கள் என்பதை தயவன்புடன் அறியத்தருகின்றேன்.

**நன்றி.**